உ

# நல்லூர்க் கலம்பகம்







இயற்றியவர்

"புலவர்மணி" வை. க. சிற்றம்பலம்

(1914-2015)


2020


பதிப்பாசிரியர்

சி. சிவானந்தராஜா

உ

# நல்லூர்க் கலம்பகம்

"கலாபூஷணம்" முதுபெரும் புலவர்

## வை.க.சிற்றம்பலம்

(அளவெட்டி/இணுவில்)

பதிப்பாசிரியர்

சி.சிவானந்தராஜா

2020

# நூல் விபரம்

நூல் :- நல்லூர்க் கலம்பகம்

நூலாசிரியர் :- வை.க.சிற்றம்பலம்

அலுக்கை, அளவெட்டி

பதிப்பாசிரியர் :- சி.சிவானந்தராஜா

செட்டிகுறிச்சி,

பண்டத்தரிப்பு.

முதற்பதிப்பு :- 2020-06-30

பக்கம் :- 48+6

விலை :- ரூபா 150/=

பதிப்பகம் :- சாய்ராம் பிறிண்டேர்ஸ், சங்கானை.

**நூன்முகம் :-கலம்பகம் - ஒரு விருந்து**

**புலவர்,பண்டிதர் ம.ந.கடம்பேசுவரன் B.Sc.M.A. தமிழ்(சிறப்பு)**

பல நூல்களைத் தந்த புலவர்மணி அவர்கள் அன்பால், பண்பால், அறிவால் எவரையும் தன்பால் ஈர்க்க வல்லவராய் விளங்கியவர். அதனால், அவரது ஆக்கங்களான பிரபந்த ங்களையும் மனங்கொண்டேன் - வாசித்தேன் - தற்பொழுது அவரது நல்லூர்க் கலம்பகம் கிடைத்துள்ளது.

சொல்லும் செயலும் ஒன்றியிருக்க வாழ்ந்த, புலவர்மணியவர்கள் தன்பால் கையெழுத்துப் பிரதியாய் வைத்திருந்த "கலம்பகம்" அவர்தம் தளர்ச்சி - நூறாண்டுக்கு மேல் வாழ்வு (அகவை) கண்ட தளர்ச்சி - வெளிக்கொணர முடியாமற் செய்துவிட்டது. தற்பொழுது புதல்வன் முயற்சியால் நூலுருவாகின்றது.

"சிதலை தினப்பட்ட ஆல மரத்தை
மதலையாய் மற்றதன் வீழூன்றி யாங்குக்
குதலைமை தந்தைக்கட் டோன்றிற் றான்பெற்ற
புதல்வன் மறைப்பக் கெடும்"

குதலைமை - தளர்ச்சி, தந்தையின் தளர்ச்சி நீங்கச் செய்வது மதலையாம் மைந்தனின் முயற்சியன்றோ! அந்த முயற்சியால் வரும், இக்கலம்பகம் தொல்காப்பிய விருந்தில் அடங்கும். அதனால் நல்லூர்க் கலம்பகம் என்பது இரட்டுற மொழிதலாகி நமக்கும் விருந்தாகின்றது.

செய்யுளினைக் காத்திரமாக்கும் அவை பலப்பலவாகி நயந்தரும் கலம்பகமாக அமையும். செய்யுள்களில் வந்து சேரும் சொற்றொடர் வளர்ச்சியில் மொழிவளர்ச்சியுள்ளது. சொற்கள்

பெரும்பான்மையும் பலவுறுப்பும் திரண்டவழிப் பெறுவதொரு செய்யுள் அழகாம். இவ்வனப்பு அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து இயைபு, புலன், இழைபு இவ்வெட்டினுள் ஐந்தாவது, புதிதாகத் தொடுக்கப்பெறும் செய்யுளின் மேலது. தோல் போலப் பழையதும் புதியதுமாகிய கதைமேலதன்றி இது புதிதாகப் படைத்துத் தொடர்நிலை செய்வது.

முத்தொள்ளாயிரமும் பின்னுள்ளார் பாட்டியல் மரபிற் கூறிய கலம்பகச் செய்யுள் முதலியவற்றைப் பாடுதலும் விருந்து என்னும் வனப்பு வகையாம். பல இலக்கியங்களோடு இக்கலம்பகத்தையும் வைத்தாராய்ந்து இன்புறலாம் பலவுறுப்புக்கள் கலப்பதால் கலம்பகம் எனப்பட்டது.

பாட்டியல் நூல்கள் இவ்விலக்கியத்துக்கு (கலம்பகத்துக்கு) இலக்கணம் வகுக்கும்போது பொருண்மை நிலை உறுப்புக்களையும் செய்யுள் வகைகளையும் இணைத்துத் தருகின்றன. இன்ன இன்ன செய்யுள்களாற் தொடங்கி இவ்விவ் வுறுப்புப் பெற்று இன்னின்ன செய்யுட்கள் விரவி வருவது என்பதே அதன் அமைப்பு அவ்விதம் கூறும் போது மடக்கு அல்லது வெண்டுறை போன்ற செய்யுள் வகைகள் இணைந்து விடுவதுமுண்டு.

இவரது நூலிலும் எண்பத்தெட்டாவது செய்யுளில் மடக்கு வந்து சேர்ந்துள்ளது. “பாரும் வானும்....... (என்று தொடங்கி) எந்தை என்னுள் இருக்க நின்றாடுமே” எனக்கூறி மகிழ்கின்றார்.

பதினொராவது பாடலிலும் மடக்கு வந்துள்ளது காணலாம்.

"ஒப்பில் வேதத் உயர்ந்த திருக்கை........" எனவும் தன் மனநிலையைத் தெரிவிக்கின்றார். வெண்டுறையாவது மூன்றடி முதல் ஏழடி காறும் வந்து பின்னர்ச் சில அடிகள் குறைந்து வேறோர் ஓசையாகவும் வருதலுண்டு இவை முறையே ஓரொலி வெண்டுறை வேற்றொலி வெண்டுறை எனப் பெயர் பெறும். மடக்கு வந்தமையால் வெண்டுறையை விட்டுள்ளார். எனினும் குறிப்பாக துறைநிலைச் செய்யுள்கள் புலவரது மரபுநிலைப் புலமைக்குச் சான்றாகின்றன.

பாட்டியற் கொள்கைப்படி கலம்பகத்தில் வரும் செய்யுட்கள் ஆசிரியப்பா, ஆசிரிய விருத்தம் ஒருபோகு கலித்தாழிசை, கலித்துறைக் கலிப்பா, கலிவிருத்தம், வஞ்சித்துறை, வஞ்சிப்பா, வஞ்சி விருத்தம், வெண்பா, வெண்டுறை என்பன முறையே,

ஐம்பாவும் துறையும் விருத்தமும் எனவும்
ஐவகைப்பாவும் இனமும் எனத் தொகுத்துக்

கூறுகின்றன இக்கொள்கைகளை நம்புலவர் அவர்கள் சுவையாகக் கையாண்டுள்ளார். கலம்பக அமைப்பில் புலவர் அவர்கள் சிறிதும் விலகவில்லை என்றே சொல்லத் தோன்றுகின்றது. இஃது ஒரு சிறு நூலாயினும் - கடுகு சிறிது காரமோ பெரிது - என்பது போல யாப்பறி புலவராகிய வை.க.சி அவர்கள் தன்னறிவை வெளிக்கொணர்ந்துள்ளார்.

கலம்பகத்திடையே சிந்து கும்மி போன்ற பிற்காலப் பனுவல்களையும் சுவைபடத் தந்துள்ளார்.

பனுவல் வகைகள்:- நூல், பிரபந்தம், புராணம், காவியம் என்பவற்றுள் அடக்கலாம். நூல் முருகனாகிய தெய்வம் (ஆண்) பிரபந்தம் - பெண் எனவும் காட்டுவர்.

இவர்தம் செய்யுளூடாக, பனுவல் உணர்த்தும் அறம் பொருள் இன்பம் வீடு என்பன, முறையே. மாதா பிதா குரு தெய்வம் என்பவர்களோடு ஒப்ப நிற்கும்

நூல் என்னும் வகையுள் இலக்கியம் சோதிடம் நீதி மருத்துவம் சிற்பம் முதலிய திறம் பேசும். பொதுவாக பிரபந்தம் எனப்படுவது தெய்வம் அரசன் வள்ளல் நன்மக்கள் ஆகியோரைத் துதிப்பதாகும்.

புலவர் தந்த துதிப்பாடல்களாலான - கலம்பகமாகிய இந்நூல் குறிப்பாகக் கீர்த்தனை சிந்து முதலியன ஒலிநாடாவாக அமைவது நல்லது.

வாழ்க புலவர்தம் நாமம்
வளர்க தமிழ்ப்பனுவல்கள்

**ம.ந.கடம்பேசுவரன்** **சிந்துபுரம், வட்டுக்கோட்டை.**

உ

# பதிப்புரை

இது முதுபெரும்புலவர் (1914-2015) திரு.வை.க.சிற்றம்பலம் அவர்களால் இயற்றப்பட்ட "நல்லூர்க் கலம்பகம்" என்னும் நூலாகும். அன்னாரது கைப்பட எழுதிய மூலப்பிரதியில் 1994-11-12 எனத் திகதி குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் இந்நூலை எழுதி முடித்த பின் பல்லாண்டுகள் வாழ்ந்திருப்பினும் நூலாக வெளிவரவில்லை. 1995இல் ஏற்பட்ட இடப்பெயர்வுக் காலத்தின் போதும், இந்நூல் சிதைவு இன்றிக் காணப்படுவது ஓர் மகிமையாகும். இவ்வரிய நூல், அவர் இறந்த பின்னரே எமது பார்வைக்குக் கிட்டியது. எனினும் நல்லூர் முருகனுக்குக் "கலம்பகம்" பாடியவர்கள் பற்றிக் குறிப்புக்கள் ஏதும் இல்லை. எனவே அன்னாரது நூலைக் காலம் கடந்தாயினும் பதிப்பிக்க வேண்டிய தேவை எமக்குள்ளது. அன்னாரது நூலினைப் பதிப்பித்து சுவைஞர்களது பார்வைக்கு, பணிவன்புடன் சமர்ப்பிக்கின்றோம். நல்லை முருகனின் ஆசியும் அருளும் யாவர்க்கும் கிடைக்க வேண்டுகின்றோம். தங்கள் கருத்துக்களை வரவேற்கின்றோம்.

இந்நூல் நல்ல முறையில் நூலுருப்பெற பல வழிகளிலும் உதவியதுடன், நல்லதொரு **நூன்முகம்** தந்து இந்நூலைப் பெருமைப்படுத்திய மூதறிஞர் ம.ந.கடம்பேசுவரன் அவர்களுக்கு நாம் நன்றி கூறுகின்றோம்.

நன்றி.

**சி.சிவானந்தராஜா**
**(சிற்றம்பலம் குடும்பத்தின் சார்பில்)**

**செட்டிகுறிச்சி, பண்டத்தரிப்பு**
**2020.06.30**

உ

# நல்லூர்க்கலம்பகம்

## காப்பு

### நேரிசை வெண்பா

நல்லூர்க் கலம்பகத்தை நற்றமிழில் யாப்பமையச்
சொல்லூர்ந்து பாடித் துதிக்கவே - வல்லமைசேர்
ஐங்கரத்துப் பண்ணவனா மானைமுக னென்னிதயப்
பங்கயத்துள் வீற்றிருப்பன் பார்த்து.

குரு வணக்கம்

கட்டளைக் கலித்துறை

வித்தக ராங்குரு வித்துவான் சுப்பைய பிள்ளையுடன்
ஒத்த கலாநிதி மட்டூர் கணபதிப் பிள்ளையுமென்
சித்தத் திருக்கச் சிறந்தயாழ் நல்லூர்க் கலம்பகத்தை
முத்தந் தொடுத்தெனப் பாடுவன் முன்னோர் மொழிவழியே.

அவையடக்கம்

சந்தன மாம்பொதி மேவு முனியுந்தொல் காப்பியனும்
தந்த இலக்கணங் கைக்கொண்டு நூல்செய் தமிழ்ப் புலவீர்
எந்தை முருகற் கியைந்திட நல்லூர்க் கலம்பகத்தைச்
சிந்தையில் நோற்றுச் சிறுபாவிற் பாடினன் தேர்மினன்றே.

## நூல்

## மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா

### (தரவு)

ஈழமெனுந் திருநாட்டி னினியயாழ்ப் பெரும்பதியில்
சூழவரு மழகுடனே தொடர்ந்திலங்கு மொருநல்லூர்
தேவரைச் சிறைமீட்டு சிவன்கழலே பணிந்தேத்தி
காவலொடு திருநல்லூர் கலந்துறைநம் கடம்பகேள். 01

மலைக்கோ புரக்கோயில் மயிலாட முகிலாடக்
கலைக்கோ லத்திருவீதி கடிமதில்கள் வனப்பாக
நிலைக்கோல மூலத்தில் நிறைந்தாடும் வேலெனவே
தலைக்கோல மொளிவிளங்குந் தனித்தமிழின் தலைவகேள்02

### (தாழிசை)

சங்கரனார் பெருஞ்சோதித் தனிப்பிழம்பா யுனையேவ
பங்கயஞ்சேர் சரவணத்தின் பால்மகவாய் நின்றியால் 01

அங்கன்கார்த் திகைமாதர் அணைத்தெடுத்து முலையூட்ட
செங்கையால் நிலாவழைத்துத் திருமகனாய் நின்றநீ 02

அன்னையுமை யணைத்திடவே அறுமுகம்பன் னிருகரமாய்
முன்னியொரு திருக்கோல முறைகொண்டு நின்றியால் 03

புரவலரும் புலவர்களும் புகழ்ந்துன்றன் கழல்பணிய
வரமளிக்க மகிழ்வோடு வளவாயில் நின்றியால் 04

கடம்பனெனக் குகனென்ன கருணைநல்லூ ரவனென்ன
இடம்படவே யெமர்வணங்க யெழில் திருவா யிலில்நிற்பாய்.05

நிலம்பொலிய மழைபொழியும் நெடுவானை நிகர்த்த தமிழ்க்
கலம்பகத்தின் கவிகேட்கக் கலந்ததனுள் நின்றிடுவாய் 06

அதனால்

(அராகம்)

கடிகதி ரொளியினுங் கணித்திடாப் பாதல
வடிவினி லடங்கிடா வளருமுன் வனைகழல்
நெடிதுயர் ககனமேல் நிலவிடும் நவகோள்கள்
முடியிலு மளக்கொண்ணா முறையதுன் திருமுடி
அளவிலா மதனனா ரழகெலாந் திரண்டென
வளவிய பவளமால் வரைநிகர் திருவுரு
அறுமுகம் திருக்கரம் அருள்விழி திருச்செவி
நிறமுறு பலவணி நிலவுநல் லையனே.

(தாழிசை)

தண்டையுடன் சிலம்பார்ப்பத் தகுதிமியென் றடியெடுத்து
அண்டமுழு தினியாடி யணிமயிலில் வலம்வருவோய்
பரங்குன்றி லலைவாயி லினன்குடியே ரகமதிலும்
பெருங்குன்று தொறுமாடிப் பழமுதிர்சோ லையுநிற்பாய்
விளங்கீழத் திருமாவை இணையிலிசந் நிதிவனமும்
வளமண்டூர் கதிர்காம மருவிநல்லைப் பதிவருவோய்
களங்கமிலா ரகமுள்ளே கற்பகமாய்க் கருணைபொழி
இளங்கதிர்வே லுடையோனே எனதிதய மிருந்தருள்வாய்.
பரிபாட லுடனாற்றுப் படையோடு திருப்புகழும்
உரிதான புராணமும்போல் ஒருபாடற் கலம்பகங்கேள்.
மேலும்,

(அம்போதரங்கம்)

பிருதுவியில் மலை
பெருங்கடலின் துறை
இருந்தீயி லவி
இருங்காலி னுயிர்
அரும்வானில் முடி
அருள்மனத் திடம்
தரும்புத்தி நுதி
திருந்திறல் வீரம்
சேர்ந்த,

(சுரிதகம்)

தந்தையா முயிராய்த் தாயெனு மெய்யாய்
முந்தைபோ லெட்டு, மிரண்டுமாய் நிற்போய்
நாடியிவ் வுலகெலாந் தேடியே வந்து
நல்லவூ ரெனப்புகழ நல்லூர் தனிலுனை
தலைவனா யேற்று தலைவிய மடியர்
காட்சிகண் டேத்துங் கவின்முறை யதனால்
கலம்பக மாலையுன் கழலடி நலம்பெறச்
சூட்டினேன் நல்லருட் டுணையே.

2. உறுபெயர் கேட்ட தலைவிக்குத்
தோழி முருகனே அவனென உரைத்தது.

(நேரிசை வெண்பா )

தூதுரையைக் கேட்காத தொல்சூரை ஞானமெனும்
ஆதிசக்தி வேலா லடக்கியே - தீதகற்றி
கந்தனென நின்றானைக் கற்பகத்தை நல்லூரில்
வந்தவனை நீபணிந்து வாழ்த்து

3. ஊர் :- நல்லூர்

(கட்டளைக் கலித்துறை)

வாழும்யாழ்ப் பாண மணிமுடி மன்னருமற் றையருஞ்
சூழும் படிகுடி யேறித் தனிநகர் தோன்றநின்று
தாழும் யமுனைத் தனிவய லோடு தலைசிறந்து
கோழில்பேர் நல்லூர்க் குமரன் திருத்தலங் கொண்டதுவே.

## 4. பாண்

### தலை மகனிடமிருந்து வந்த பாணனை நோக்கித் தலைவி கூறியது
### (எண் சீராசிரிய விருத்தம்)

வேதப் பொருள்தெரி வேலன் வருமென
        வேதனை தந்திட்ட பாண விளம்பினை
ஆதவன் போலெனைக் காய்ந்திட்ட மன்மதன்
        ஐவகைப் பாணமு மெய்வகை யேவினான்
போதனை யோடுநற் சோதனை செய்கிறாய்
        பொன்னும் மணியும் புகழும்நான் வேண்டிலேன்
சாதனை யாகநல் லூரானைச் சேர்ந்துநீ
        சந்தித்து என்னிலை சிந்திக்கப் பாடிவா

## 5. தோழி கூற்று

### (அறுசீராசிரிய விருத்தம்)

பாயிருள் படர்ந்த மலைதொறும்
        பயிலுங் குறவர் புனத்திலே
நீயணித் தாகவே சென்றிட
        நின்றவவ் வள்ளி பணியநீ
போயயல் நல்லை புகுந்தனை
        புகுந்தது மெண்ணியப் பொற்கொடி
ஆயின தன்மை மறந்தனை
        ஆதலின் மன்ற அலைந்தனை.

6. பழிச்சினர் பணிதல்

(அறுசீர் விருத்தம்) குற்றிசை

அலைவுறு மதியுடன் அறமல வியற்றிய
அழிதகன் தாருகனை
நிலையுறு மலையொடுன் அயில்புகுந் துருவிட
நெடிதடு சேவகனே
உலைவுறு நினைமன முருகிட நினைபவள்
உனையல புறமறியாள்
நவமுற வாழ்த்திட நல்லையில் அவளுடன்
நன்றிருந் தருள்தாராய்

7. திருவூசல்

(எண் சீராசிரிய விருத்தம்)

தாருடனே குழலசையத் தரளமணி யசைய
தயங்குமயிற் சாயலுடன் ஆடீர் பொன்னூசல்
போரிடயிற் கண்மடவீர் பிறங்குவினை வழியே
புகுந்தெமையாட் டும்முருகோ டாடீர் பொன்னூசல்
வாரிவாரிச் சிறைவண்டு மருவுமல ரடியான்
வாழ்வுறவே யடியார்க்கு வரமளிக்கும் வள்ளல்
பேரருளா ளனைநல்லூர்ப் புரப்போனை யேற்றி
பொன்னூசல் பாடியுட னாடீர் பொன்னூசல்.

8. பழிச்சினர் பரவல்

(எழுசீராசிரிய விருத்தம்)

ஊச லொருபுறம் பேச லொருபுறம்
ஊடு மென்மொழி யொருபுறம்
வாச மொருபுறம் நேச மொருபுறம்
வாரம் பேசுவ தொருபுறம்
தேசி லும்மவர் தூசி லும்மனம்
சென்றிடா தெமைக் காத்தருள்
ஈச நல்லையில் வாச நின்னடி
யேத்தி னோம்அருள் என்றுமே

## 9. புயவகுப்பு

### (சந்தம்)

மெலிமதி யணியிறை நுதல்விழி யொருபொறி
மேவிச் சரவண மாடிக் குதித்தன
மிளிரொளி கிளர்ந்தவன் மலர்க்கதிர்க் கரந்தொட
மீமிசை வானவர் விதக்க விரிந்தன
அரியய னிந்திரன் வெருவிட விழிக்கனல்
அடுவன போலவே யதிர வெழுந்தன.
அகம்புற மிறைஞ்சிட அங்கைகள் கூப்பிநின்
றடியவர் போற்றிட அணைத்துப் பொலிந்தன.

கலிகெழு மதலைக் குழவிக ளுருவிற்
கார்த்திகை மாதரின் மடியிற் றவழ்ந்தன
கனங்குழை யுமையவள் கரமொ டணைந்திட
கனிவுடை யறுமுகக் கந்தனாய் நின்றன
தனியொரு மறைமுத ற் பிரணவ மறிகிலா
தருக்கிய வயன்றவை தாக்கிப் புடைத்தன
தந்தை யுனக்கது போதுமோ வென்றலும்
தகவுடன் செவிதனில் ஓதக் குவிந்தன.

மலிமதின் மாட மகேந்திர வரசிற
மாதுமை யளித்தநல் வேலை விடுத்தன
மரகத மயின்மிசை யறுமுகன் வலமுற
வாரணக் கொடிமிசை கூவப் பழித்தன
பொதியநன் மலைதனிற் குறுமுனிக் கொருதமிழ்
போதித் தொருபரி பாடற் கினித்தன
புன்னகை கொண்டிரு கன்னியர் வேட்டிட
பூரித் தன்னவர் புயமுங் கலந்தன

ஒலிமிகு முலகிடை யொருதனி யீழத்தில்
உயர்ந்தயாழ் நல்லையிற் கோயில் வந்தன
உத்தம நாவலர் யோகர்செல் லப்பர்தாம்
உஞற்றிய தவமுற ஊற்றங் கொடுத்தன
உளமலி யைம்பது புலவரின் பிரபந்தம்
உவப்புடன் கேட்டவர் வாழ்வை யுயர்த்தின
உளமலி யிணைமணி மாலையான் சூட்டிட
உவந்து நல்லூரி லுயர்ந்தன வென்றுமே.

**10.** மறம்

அரசனுக்குப் பெண்கேட்டு வந்ததூதனை நோக்கி
மறக்குடித் தலைவன், மறுத்து தமது வீரம்
விளங்கக் கூறியது
(பதினான்கு சீராசிரிய விருத்தம்)

ஏசி யோலை யேந்தி வந்த
ஏந்தல் தூத சொல்லக் கேள்
இலங்கு மாடக் கூடல் நல்லை
இனிய வேலன் பாத மேல்
நேசம் வைத்த எமது பெண்ணை
பாசங் கொண்ட மன்னர் முன்
நெருங்கி வந்து பட்ட பாட்டை
நேரிற் சென்று உள்ளே பார்
பேசுங் குடையொ டால வட்டம்
பெரிய வாசலிற் படலை பார்
பிறங்கு மவர்கள் முடிகள் கொண்டு
பேணி நெல்லை யளத்தல் பார்
வீசு சாம ரை பரப்பி
மேலே வேய்ந்த குடிலைப் பார்
வில்லும் வாளும் கொண்ட டைத்த
வேலி பார்ப்பின் உய்வேனோ

11. **மடக்கு – புகழ்ந்தாரைப் பாராட்டல்**

**(எண்சீரடி யாசிரிய விருத்தம்)**

ஒப்பில் வேதத் துயர்ந்த திருக்கையே
உருகு வோர்தம துள்ள மிருக்கையே
செப்புஞ் சூரைத் தடிந்து கொண்டாடினான்
செய்ய மஞ்ஞையின் மீது கொண்டாடினான்
எய்ப்பி லிந்திரன் பாவையைக் கூடினான்
எல்லையில்குற மின்னையுங் கூடினான்
அப்பொ டுமதி சூடியின் மைந்த வா
அரிய நல்லையி லாறு முகத்த வா.

12. **புகழ்ந்தாரைப் பராவல்**

**(பதினொருசீர் ஆசிரிய விருத்தம் –திருப்பகழ் போன்றது)**

விட்டுப் பலபல தொட்டே விண்ணகம்
எட்டும் அமரரை முட்டும் அசுர்பட
கிட்டா யெனச்சுரர் - வேண்டவே
அட்டே யசுரரை விட்டே யுலகுய
தட்டா தொருசுதன் கட்டா யந்தர
இட்டோம் வரமென - இறையவன்
சிட்டர் குறைதவிர் கிட்டி யெனநுதல்
நெற்றிக் கட்பொறி உய்க்கச் சரவண
முற்றே வளர்ந்திடு - முருக நீ
துட்ட வசுர்பட விட்ட வயிற்கணை
முட்டி திரும்பிட கிட்டி நல்லையில்
தட்ட திருந்ததை மறவே னே.

**13.** **அம்மானாய்**

**(ஒரு பொருள்மேல் மூன்றடுக்கிவந்த கலித்தாழிசை)**

வேளென்ற பெயருடையான் விளங்குமுக மாறுடையான்
காளையவன் கஜமகளைக் குறமகளைத் தானணைத்தான்
கஜமங்கை யுடனந்தக் குறமகளை யணைந்ததுவும்
கருத்தினானே
கைகூப்பி யுலகறிய கருத்தின் வந்தா னம் மானாய்.
காணவா அம்மானை கடிநல்லைத் திருக் கோயில்
கருணையானே.

**14.** **வரைவு கடாதல்**

**(பதினான்கு சீரடியாசிரிய விருத்தம்)**

தோழி தலைமகளை மறந்த தலைமகனிடம், அவளது நிலைபற்றி வரையுமாறு கூறியது.

ஆயின வாழை நறுங்கனி சுவைக்க
வணைந்திடும் ஒரு மந்தி போல
அகமகிழ் அரம்பைக் கழனி னயலே
அழகிய வெழில் புகழ முருகா
வேய்தரு முத்தும் வெள்வளை முத்தும்
விரும்பிலள் உனைவிரும் பினளாய்
வெய்துயிர்த் திடநீ வெறுப்பவன் போல
விருப்புட னிருத்தலுந் தகவோ
காய்கதிர்ப் புழுவின் கலங்கினா கிருப்பக்
கந்தனா யிருந்தும் நீ மறந்தாய்
கற்பக மென்றும் கண்மணி யென்றும்
கதைத்ததை நினைந்தது மிலையோ
தூநெடு மாடந் கோபுரக் கோயில்
துலங்கிடு நல்லைவாழ் சுடரே
தூயவள் நிலைமை துலங்கிட வந்தேன்
துயரற வரைவுசெய் தருள்வாய்

## 15. வாயுறை வாழ்த்து (மருட்பா)

(பெரிதும் வெண்பா வடிவு பெற்று, சிறிது கவற்
பாவால் முடிவது)

வாய்க்கு மிளம்பருவம் வந்துற்ற போதினிலே
பூக்கும் பெருங்கல்வி போற்றியே - ஆக்கமுற
ஏத்தும் கடவுளரில் எம்மன்னன் தந்தையரைத்
தோத் திரித்துத் துன்பம் துடைப்பீர் - காத்திருந்தே
பாதகரைத் தீயவரைப் பற்றாமல் ஒன்றிலராம்
எதிலர்க்கு நன்றா யிரங்கிடுவீர் - ஆதியாம்
மாதொரு பாகன் செவியில் மந்திர மூலம் மொழிந்த
போதகனை நற்குகனைப் புண்ணியனை - காதலுடன்
குன்ற மெனநிற்கும் கோலநல் லூர்க் கோயிலின்கண்
சென்று பணிந்து திறம்பாடி - நன்றவன்றாள்
பற்றுமா பற்றி பலமாலைகள் சாற்றியே
வற்றாத வன்பின் வலையினை வீசியே
கார்த்திகை நாளும் கந்தசட்டி நன்னாளும்
சீர்த்தியாம் வெள்ளியும் சிந்திப்பீர், சிந்தித்தால்
கனவிலுந் தோன்றும் நனவிலுந் தோன்றும்
கண்ணிலுந் தோண்றும் விண்ணிலும் அன்றி
மனமொழி ஒளியென வாரமாய்த் தோன்றி
அல்ல லொழித்து அன்புற
எல்லையில் வரங்கள் ஈந்தருள் புரிவனே

## கனவொடு புலம்பல்

## 16. (அறுசீராசிரிய விருத்தம்)

புரிகுவ னொருநா ளென்று போற்றியே நல்லூ ருன்னி
உரியபூ வணைமேற் கொண்டு உறங்கலு மந்தக் கள்வன்
கிருபைசெய தமளிப் பாங்கர் கிளர்ந்திட வருகை தந்துன்
அருமைப்புன் முறுவல் செய்தேன் அருங்கனா போயிற் றந்தோ.

**17. களி – மதுவருந்திய ஒருவன் வெறிக் களிப்பினால் பாடியது.**

**(எண்சீராசிரிய விருத்தம்)**

தொன்மை சேர் நல்லைத் தெங்கு தன் பாளையாம்
சிரிப்பி னாலிள நீரைப்பின் னாடை யால்
மென்மை யாக மறைக்குஞ் செயலென
மேவும் வள்ளிக் கொடிபடர் வேலனே
நன்மை யற்ற பொறியிலி மாந்தரில்
நாமும் பெண்ணை மதுவருந்திக் களி
புன்மை கொண்டுபன் னாடையிற் போற்றுமப்
புதுந றுங்கனிக் கீடவ ளோ சொலாய்.

**18. பிரிவுழி இரங்கல் (கை–சிறு, கிளை– உறவு)**

**(கையுறை, கைவாளி, கையாள் என்பது போல)**

**வெண்பாவும் ஆசிரியப்பாவுஞ் சேர்ந்த மருட்பா)**

சொல்லாடு நோக்குஞ் சுவைசார்ந்த புன்சிரிப்பும்
எல்லேர்சீ ராறு முகமு மாய் - வல்ல
திருக்கரமீ ராறுந் திகழ்ந்முந்நூன் மார்புங்
கருத்தினிய சேவடியுங் காட்டி - பொருத்தமாம்
பட்டுப்பீ தாம்பரமும் பன்மாலை யுஞ்சாத்தி
நெட்டிலைவை வேலை நிமிர்த்தியே - கட்டழகில்
ஆயிரங் காமரழகு திரண்டனவே
மாயிரு ஞால மதிக்கவே - சேயவனே
ஏறு மயிலேறி யிதய மதிற் புக்கான
கூறுவள நல்லூர்க் குடியிருப்பில் - நூறூர்சேர்
பண்ணிசைப் புலவரும் பன்னூ லறிஞரும்
முன்னிய முடிக்கும் முத்தீச் செல்வரும்
கந்தென நினைந்து வந்தனை புரிநரும்

உண்ணா நோன்பினர் உச்சிமேற் கையினர்
பத்தியின் மிக்க உத்தம வடியரும்
எத்துணை யெத்துணை யாக வணங்கினும்
அத்தனென துளமிருந்தே னகன்றான்
இத்தனை நாளு மெண்ணி யலைந்தேன்.
உள்ளக் கமல முருகுமா றிருந்தேன்
வித்தக னென்னிலை விளங்கி
எத்திறஞ் செய்யுமோ இரங்கலை நெஞ்சே

**19. பந்து – (காவடிச் சிந்து)**

நெஞ்சக மலர்த் தாமரையில் முருகனை இருத்தி - நல்லூர்
 நிறைந்த சோலை வீதியிலே பந்தடிப்போமே
கஞ்சமலர்க் கரவளையல் கலகலக்கவே - ஓடி
 கன்னியர்நாம் கூடியாடிப் பந்தடிப் போமே
மஞ்சுதவழ் மாலைநிலா வந்து பார்க்கவே - இந்த
 மாநிலத்தோர் வாழ்கவென்று பந்தடிப் போமே
பஞ்சு பட்டால் புனைந்த வட்டப் பந்தடிப் போமே இனிய
 பண்பாடிப் பந்தடிப்போம் பரன் பயன் பெறுவோம்.

**20. நடமகள் (எண்சீராசிரிய விருத்தம்)**

பெற்றகண் கைவழிப் பிறங்கியே அசை
 பேரடிச் சிலம்புகள் பேசிட யலைந்திட
கூற்றிடை ஓசிந்தொசிந் துருகிட வோலிட
 உரியநற் கொங்கைகள் உதிர்வபோலசைந்திட
கற்ற நன் னூலெலாம் பயன்தரு மாறுபோல்
 கன்னிகை காதலித்தே நட மாடவே
முற்றுமா யெனதுளம் தோன்றினான் நல்லையில்
 முன்னியே யவன்கழல் நண்ணினேன் காணவே.

21. குயில் (அறுசீரடியாசிரிய விருத்தம்)

கண்டே னழகி னொருவன்
கன்னித் தமிழைத் தந்தான்
பண்டே யசுரை யழித்தான்
பரிந்தே சுரரைக் காத்தான்
வண்டேர் வீதி நல்லூர்
வடிவே லவர்க்கென் நிலையை
தண்டே னிசையின் குயிலே
தனிச்சென் றருளைக் கூவாய்

22. கிளி (அறுசீராசிரிய விருத்தம்)

வாழ்வாய் மழலைக் கிளியே
வாடுந் தமியேன் நிலையைச்
சூழ்வாய் மதில்சேர் நல்லூர்
சுடர்வே லவர்பால் விளக்கி
ஊழ்வாய் யுரைத்து வருவா
யுன்றன் மழலை யுவப்பான்
தாழ்வாய்ச் சொன்னேன் உனக்குத்
தயவாய்க் கூறி யழைப்பாய்

23. ஊரின் தொன்மை (எண்சீராசிரிய விருத்தம்)

அழைத்தரசு நகர்கட்டி ஆண்டவொரு நல்லூர்
ஆயிரத்து இருநூற்று நாற்பத்தெட்டின் நல்லூர்
விழைத்திடுநல் வேதியர்கள் குடியிருக்கு நல்லூர்
வெற்றிவேல் தலம்தீர்த்தம் விளங்குகின்ற நல்லூர்
மழைக்குலங்கள் கண்டுமயி லாடுகின்ற நல்லூர்
மலைமுனிபோல் தமிழ்வளர்த்த நாவலரின் நல்லூர்
தழைக்குந்திரு நெல்வேலி சார்ய முன நல்லூர்
தவமுடையார் போற்று நல்லூர் தனையுரைக்கலாமோ.

**24. காலம் (பத்துசீரடியாசிரிய விருத்தம்**

**(இது நல்லூர் முருகனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு தலைவி அவரை எதிர்பார்த்த காலம்)**

மோனஞ்செயு மலர்களிலே முரலும் வண்டின் காலம்
முளைத்திடுமாந் தளிர்கோதி குயிலுங் கூவுங் காலம்
ஆகமதிற் காதலரை அழைக்குந் தென்றற் காலம்
அன்று சென்று மறந்தவரை இன்றழைக்குங் காலம்
கோகநக மலர்வளரும் யமுனை யாடி யடியேன்
குலவு நல்லூர் முருகனையே மாலையிட நினைந்து
யோகமொடு சட்டிவரை நோக்குங் காலம் நோக்கி
குறிஞ்சியென நின்றகாலம் கோயிலிற் கண்டுணர்வாய்.

**25. முன்னிலைப் பரவல்**

வாளரிக் கண்ணியும் வளர்மதி யிறையும்
நான்மலர் சூடிநல் வான்மலை யிருக்கையில்
அடிமுடி யறியா அயன்முதல் தேவர்
கடிதெமை யாளென படுதுய ரியம்பலும்
கலங்கலிர் கலங்கலிர் எனக்கரங் காட்டி
நுதல் விழி வழியே அறுபொறி யுய்ந்திட
சரவணம் புக்கு அரும்பெருங் குழவியாய்
கார்த்திகை மாதர்பால் நேர்த்தியா பயின்றனை
கூர்த்த மெய்ஞ் ஞானிகள் ஆர்தனடி ஆர்த்திட
மழலைகள் பொழிந்தனை மகிழ்ந்து தாலாட்டிட
ஆயிரங் காம ரழகொடு திகழ்ந்தனை
அன்னை யணைத்திட அருங் கந்தனாகி
மூவிரு முகமும் ஆறிரு புயமுமாய்
வளர்ந்தனை இந்த மாநில முய்ய

பந்த மழித்திரு பதமல ரீந்திடும்
சத்திவே லீந்தென் முத்தென வாழ்த்து நாள்
மகேந்திர மிருந்து முகாந்திரஞ் செய்யும்
பெருங்கொடுஞ் சூரனை இரும்படை யேந்தி
அடியோ டழித்து அமரரை மீட்டனை
இந்திரன் மகளைத் தந்திட மணந்தனை
நாரதர் மொழிதனை வாரமாய்க் கேட்டு
குறக்கொடி வள்ளியைப் புனத்திடை யணைந்தே
தினையிடி யவல்தேன் தீம்பழம் மாந்தி
உறுதவப் பொதியில் குறுமுனி தனக்கு
கூடலி லாய்ந்தவொண் தீந்தமி ழுணர்த்தினை
ஆற்றுப் படையும் அருந்திருப் புகழும்
வீற்றுவீற் றிருந்து கேட்டு மகிழ்ந்தனை
பேறுதரு மீழப் பெருந்திருப் பதிகளில்
நல்லூர் தன்னை நயம்பட விரும்பினை
விண்தொடு கோபுரக் கண்கவர் கோயிலில்
பூசைக ளேற்றுப் புராணங்கள் கேட்டு
ஓசைசேர் பக்தி நூல்சூட் டினர்க்கு
நேசமா யுவந்த நினைப்பெலாம் வழங்கினை
ஆசையால் யானுமுன் னடிமலர் வேண்டி
கலம்பக மென்னுங் கவிதை மாலையினை
உளங்கொளப் பாடி உன்கழல் மலர்க்கே
வளங் கொளச் சாத்தினேன் வையகம் திருந்தே
மேலும் மேலும் பாட நினைந்தேன்
ஏடுங் கையுமா யிருக்கு மெனக்குந்
நாடிய தெல்லா நன்குதந் தருளி
வாடிடா தடியேன் வைகிடக் காத்து
கோடி யின்பங் குறைவிலா தருளும்
நாடும் நல்லூ ரனைய பெரிய
வீடுந் தந்தருள் விமலவென் பரனே.

**26. நற்றாய் வேலனை வேண்டுதல்**

**(கலி விருத்தம்)**

பரவு நல்லைப் பதியுடை வேலனே
விரவு நன்மலர் மாலைகள் மீக்கொண்டு
கரவி லுள்ளக் களிப்புட னென் மகள்
வரவு கொண்டுனை வாழ்த்தினள் வாழ்விப்பாய்

**27. பாவை (நற்றாய் துயிலெழும்புதல்)**

வாயமுதா யாற்றுப்படை வல்ல புகழோடு
வழங்கு மயில் வேல்பூதி படித்தணையில மேவி
தூய நல்லைக் கந்தனையே தொழுதயர்ந்து துயிலும்
சுந்தரியே வைகறையின் தோற்ற மதைக்காண
நேயமுடன் துயிலெழுந்து யமுனை குடைந்தாடி
நிமலனுக்கு நறுங்கனிகள் மலர்முதல கொண்டு
தாயமுடன் கோயில் புகுந் தையனருள் பெறவே
தகுந்தருணம் வந்திடுவாய் தையலென்றன் பாவாய்

**28. பாவை நிலைகண்டு நற்றாயிரங்கல்**

**(எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)**

பாவா யிசைக்குந் தமிழ்த்துறை வாணர்
பண்ணொடு நின்றனைப் பா
ஆவா வென்றே யவர் கறை யகற்று
மண்ணலே நல்லையில் முருகா
ஓவா தடியா ருள்ளத் துறைந்தும்
ஒப்பிலாப் புலவர்பா லிருந்தும்
தேவாதி தேவான் மகள்முனே வந்தால்
தீர்த்திடு மன்னவ ளிடரே.

29. பழிச்சினர் பரவல்

(எழுசீரடி யாசிரிய விருத்தம்)

இடர்தீரக் காம விருந்தீ யணைத்தும்
இன்பமே பொருளெனக் கொண்டும்
அடர்சுடர் வேலுட னையநீ யந்த
அரும்வள்ளி பாற்காதல் நயந்தே
மடலேற நின்றனை யுனக்கது சாலா (து)
மங்கையின் தோழியே துணையாய்த்
திடமா யுயர்ந்த நல்லை போ யவளைத்
தேனுகர் வண்டிற் சேர்ந் திருப்பாய்

30. காம மிக்க கழிபடர் கிளவி

கலிவிருத்தம்

பரிந்துகிளி தமிழ்பேசும்
பால்தடத்திற் சேல்பாயும்
துணிந்து மதி மேலுயரும்
தொடர்ந்து பொருள் புணை சேர்க்கும்
அணைந்து திரை மணிவீசும்
அருணல்லை முருகேசன்
தணிந்தமுதந் தான்தரவே
தமியேன் பால் வருவானோ

31. தோள் வகுப்பு

(அறு சீராசிரிய விருத்தம்)

வானந் தொடர வுயர்ந்தன
வள்ளிக் கொடியைத் தழுவின
மானந் தருநெடுஞ் சூருடல்
மறையைப" பிளந்திடு வலியின
தேனந் தருமலர் மாலைகள்
செறியப் புனைந்து செழிப்பன
ஆனைந்து மஞ்சன மாடுவ
அருள்நல் லூரனின் தோள்களே.

## 32. மடல் – கலிவெண்பா

தொடியும் வளையும் துவள மிடையள்
வடிவின் இகுளையை வாவென் றழைத்து
அடியேன் புனத்தி லரும்பரண் மேவி
வடிவேல் முருகனை வாழ்த்தி வணங்கி
அடுபுனங் காத்திட ஆலோ வொன்று
கடிகவண் வீசிக் கிளிகடி காலை
கொடியே யொருவனின் கொள்கைகே ளென்று
நெடிதுயிர்த் தாங்கே நிலவிய சொல்வாள்
வடிவுடை வேலும் வளருடற் கட்டும்
தொடியணி தோளும் துலங்குமுந் நூலுமாய்
அடிதிகழ் தண்டையொ டார்க்குஞ் சிலம்பினை
முடிவிலா தாயிரம் மன்மதர் போல்வான்
அடியேன் கலங்கவு மவ்விட மகன்றான்
இடியிடி யென்றுள மேங்கிற் றவனை
கொடிதவழ் நல்லையிற் கோவிலிற் கண்டே
கடிதுளம் விரைந்தது கலங்கினேன் அன்பின்
மடமயி லென்னிலை மானவற் கோதாய்
கொடியோ னெனதுரை கொள்ளா னெனிலோ
மடன்மா ஊர்தலை மன்னுவே னென்பாய்
கடலெனுங் காமத்தாள் கரைந்தன கொண்டே
முடிவரை கேட்டு முறுவல்செய் தையன்
அடியினை சேர்க்கும் அருளினா லூடிக்
கடிமணஞ் செய்தனன் காதலா லன்றே.

33. பழிச்சினர் பணிதல்

(வஞ்சித்துறை)

அன்று வந்தனை யருளுடன்
குன்றெ றிந்தநங் குமரனே
இன்று வந்தனள் நல்லையில்
நன்று வந்தருள் சொரிகுவாய்

34. கைக்கிளை (மருட்பா)

சொரியு மருட்கடலே சூர்கிளையை வீட்டி

பரியுஞ் சுரர்க்கரசு பண்ணி - அருள்விழிக்கண்
ணம்பினால் என்னைநீ ஆட்கொண் டாய்
நம்பினேன் வந்தேன் நல்லூர் முருகனே.

35. பழிச்சினர் பரவல்

(வஞ்சி விருத்தம்)

முருக முருக வெனப்புன
மருவு மவளுடன் நல்லையா
மருவி யுன்னருள் பெற்றிட
வருக வருகென வாழ்த்துவோம்.

36. தவம்

(கலி விருத்தம்)

வாழ்ந்து நல்விர தாதிகள் கொண்டுனை
தாழ்ந்து நல்லை தவம்புரி யன்பர்கள்
சூழ்ந்த நின்பதத் தேனை மாந்தியே
ஆழ்ந்த முத்தி யடைவர் விளங்கவே.

37. வாயுறை வாழ்த்து

(சந்தக் கலி விருத்தம்)

விளக்கில்லவர் பழிப்புள்ளவர் வெறுப்புள்ளவ ரேனும்
அளபில்லொரு பஞ்சம்பசிக் காளானவ ரேனும்
தளர்ப்பின்னொடு கொடியர்பெரும் தவமில்லவ ரேனும்
அளப்பிற்குக னல்லூர்தொழி னவர்மேன்மைக ளடைவார்.

38. கலித்துறை

(தலைவி தோழிக் குரைத்தது)

ஆயமு நானுந் தோழியு மாடு மணிகரை மேல்
ஏயின மயின்மேல் செயென வந்தென் னெழிலுண்டான்
தூயநல் லூரான் பால்தேன் போல் பல சொலிச்சென்றான்
நாயகன் மணியும் மயிலும் உண்மை நவிலாவோ.

39. பழிச்சினர் பரவல்

(கலி விருத்தம்)

நலிவு நீங்கிட நற்றவ மோங்கிட
பொலிவு நல்வளம் பொங்கிடப் பூமியில்
கலியு கம்வர கந்தன்தன் சேவடி
மலியு நல்லூர் மலர்ந்திட வாழ்த்துவீர்

40. கும்மி

(ஒரு பொருண்மேல் ஈரிரடண்டடுக்கி வந்தது)

**வெண்செந்துறை**

வாழ்த்தி வணங்கிட வண்பதந் தந்திடும்
 வானவன் கந்தனைப் போற்றிடுவோம் - போற்றிடுவோம்
தாழ்த்திச் சிரந்தனை சாந்திடு நல்லையிற்
 சண்முக னைப்பாடிக் கும்மியடி கும்மியடி (1)

காட்டில் தினைப்புனக் காவல்செய் வள்ளியைக்
கூட்டிவந் தானெனக் கும்மியடி - கும்மியடி
கொம்பனை யாளுடன் குஞ்சரி முன்சென்ற
கோலனைப் பாடியே கும்மியடி - கும்மியடி (2)

மாறிடு சூரனைப் பேருருக் காட்டியே
மாமயி லேறியே வந்தவனை - வந்தவனை
வீறிடுங் கோழிக் கொடியனை நல்லையில்
வேண்டிநின் றேபாடிக் கும்மியடி - கும்மியடி (3)

வள்ளிதெய் வானை மகிழு முருகனை
மாமயில் மேற்கண்டு கும்மியடி - கும்மியடி
புள்ளியென னத்திகழ் நல்லைக் குமரனைப்
போற்றிப்போ ற்றியாடிக் கும்மியடி - கும்மியடி (4)

41. கலி விருத்தம்

(கார்காலம் மிக்க கழிபடர் கிரவி முகிலைத் தூதுவிட்டது)

அடியேன் கார்முன் வருவேன் அன்பின்
கொடியே யென்றா ரின்றி மறந்தார்
முடிசேர் நல்லூர் முழங்கும் முகிலீர்
வடிவே லவரை வரவே யுதவீர்.

42. கட்டளைக் கலித்துறை

(நற்றாய் வழியிற் கண்டோரை வினவுதல்)

வீடேயருளும் விறல்வேல் முருகன் விரும்பும் நல்லூர்
ஊடே வருவீர் உயர்காளை யோ டொரு கன்னியவள்
காடே மருவுகுன் றின்வழி கால்கள் கடுகடுக்க
மாடே புகுந்தது கண்டதுண் டோவென் மகளவளே

43. வஞ்சப் புகழ்ச்சி

(எழுசீர் ஆ. சிரிய விருத்தம்)

ஏவது கையினன் சாறயர் புண்ணியன்
எங்கள் தமிழினக் கண்ணியனெப்
பாவது கேட்டுப் பழகிய காதினன்
பங்கயற் கும்மருள் பண்ணியவன்
நாவது கொண்டடேத்தி நம்மவர் போற்றிட
நல்லை யமர்தனன் நண்ணலரை
மாய்வது செய்வது போல விருந்தினன்
மாயமி தெப்படி மாண் புலவீர்.

44. தலைவி வண்டைத் துதனுப்பல்

(அறுசீ ராசிரிய விருத்தம்)

புலவர்கள் போற்று - நல் லூரில்
புதுமலர்ச் சோலையில் வண்டே
பலர்புகழ் கோயில் மருங்கே
பாடிப் பறந்துநீ சென்றே
அலர்பல வயலவர் தூற்ற
அடியனென் மனநலங் கலந்த
மலரெயும் வேடனைக் கண்டே
மனமய லகற்றென அறைவாய்

45. பழிச்சினர் பரவல்

(சந்தத் திருப்புகழ்)

அறந்தலைப்படு கொடியினர் கொழுநர்கள்
மறந்தலைப்படு மதியினர் படுவலைத்
திறந்தனிலுழல் வதுகண்டு மவர்தமை - மதியாதே

புறந்திரிந்தவர் பொருள்தர வருகெனக்
கரந்தணைந்தவர் சிந்தனை நின்கழல்
வரங்கிடர்திட அன்புட னவர்க்கருள் - வளநல்லாய்

திறந்திகழ்வடி வேற்படை யேந்தியே
குறம்குலளொடி குஞ்சரி மருவிட
பறந்துமாமர கதமயி லேறிமுன் - வரவேணும்

சிறந்தசைவத் தமிழ்வளர் நாவலர்
பெருந்தவச்சிவ யோகசு வாமிகள்
பதம்பணி கவிசிற்றம் பலம்புகழ் - பெருமாளே.

46. வெறியாடுவோர் வேலனை வேண்டல்
(எண்சீராசிரிய விருத்தம்)

மான மாகித் தேனிற் பேசி
மாட்சி யான பேதை மீது
கானங் கேட்டு நல்லூர் வாழும்
கந்த வேடன் வந்து தோன்ற
போன மாந்தர் புதுமை காணப்
பொங்க லிட்டுப் பூசை செய்தார்
ஞான மோனப் பெண்டிர் அவனை
நம்பிச் சென்று பணிந்து வேண்டீர்.

47. இரவுக்குறி மறுத்தல்
(பன்னீரா சிரிய விருத்தம்)

வேண்டி நாடி யிந்த யாமம்
வேட மின்றி வேலை யேந்தி
விரும்பி யிங்கே வந்த தென்னவோ

தாண்டி யிந்த நேரம் தன்னில்
தாவு நாய்கள் பேய்கள் துஞ்ச
தையல் பாங்கில் வந்த தென்னவோ

ஆண்டி யென்று வேண்டி நிற்க
ஐய நல்லைக் கந்த னென்ன
ஆகா தென்று யான்ம றுக்கவும்

காண்டி யென்று வந்த பாதை
கரவு தோன்றச் சென்று விட்டான்
காட்சி தந்த அக்க டம்பனே.

48. சிந்து

கடம்பன் வாழும் பதியென்று - நல்ல
கருணை பொங்கு முளத் தோடும்
இணங்கி நின்ற வுணர்வோடும் - வேள்
இனிய நல்லை தனில் நின்றேன்.

நின்றான் வந்தான் முருகனென --உளம்
நினைந்து வணங்க அவன்கண்டு
நன்றே யென்ன யுள்ளுணர்ந்து - மிக
நண்ணி வந்தான் நயமாக

வந்தான் தன்னை யடிபரவி - பெரும்
வலிமை யோடு செய்த வெலாம்
சிந்தை செய்தே போற்றுதலும் - கண்
சிறுகப் பார்த்து முறுவலித்தான்

அன்று ஆற்றுப் படை கேட்டே - பெரும்
அச்சஞ் செய்த கணந் தடிந்தே
சென்று கீரற் கருளியவன் - இன்று
நின்றான் நல்லூர்ப் பெருங்கோயில்

குன்றக் குறிஞ்சிக் குமரனுக்கே - ஒரு
குழந்தைபோல நூலியற்ற
நின்று தொழுதேன் நல்லூரில் - ஐயன்
நெருங்கி வந்தான் சென்றுவிட்டான்

நன்று நன்று எனநி னைந்தே - உயர்
நல்லோர் கூடும் கோயிலிலே
ஒன்று மனத்தால் கலம்பக நூல்
உஞற்றி முன்னே படைத்தேன் யான்.

49. பிள்ளைக் குறும்பு (கலிவிருத்தம்)

யான்பிடிப்பே னிக்கனியை யென்று சுடர் மதியைத்
தான்பிடிக்க நிற்கின்ற தனிமுருகன் சிவனின்
ஊன்பிடித்த முத்தலைச்சூ லத்துக்கஞ்சி யன்னை
மான்பிடிக்க நல்லூரைத் தான்பிடித்து நின்றான்.

50. சிந்து – முருகன் திருவிளையாடல்

நின்றது நல்லையில் வேல் - அதை
நிலைத்திட மூலத்தில்
நிறுத்தி விட்டார்
நிறுத்தி விட்டார்

அண்டரும் வந்து தொழுதார் - ஐயன்
அடியினைச் சூடினர்
ஆயிரம் பேர்
ஆயிரம் பேர்

தண்டமிழ் பாடிப் பாடி - தினமும்
சலத்துடன் பூவிட்டார்
தூபமிட்டார்
தூபமிட்டார்

எண்டிசை யடியர்க் கெல்லாம் - அவர்கள்
எண்ணிய வெண்ணியாங்
கீந்துவிட்டான்
ஈந்துவிட்டான்

கண்ணிலார் செவியிலார்காள் -ஊமரும்
கந்தனால் தங்குறை
களைந்து கொண்டார்
களைந்து கொண்டார்

எண்ணிய வரந் தருவான் -நல்லூர்
எழுந்தருள் வளம்பெற
ஏத்தித் தொழுமின்
ஏத்தித் தொழுமின்

51. சிந்து – பழிச்சினர்ப் பணிதல்

மின்னும் புகழ்வளர் நல்லையிற் கோயில் கொள்
வேலவா எங்கள் வேலவா - ஆறு
மீனவர் கார்த்திகை மாதர்பா லூட்டிய
பாலகா பச்சைப் பாலகா

மன்னவ னாகவே இந்திரனைக் கொலு
வைத்தவா கொலு வைத்தவா - அந்த
மாதவன் வேண்டிட மன்னித் தமிழ் சொன்ன
மன்னவா தமிழ் மன்னவா

சின்னவ னாயினுஞ் சிவனுக் குபதேசஞ்
செய்தவா அருள் செய்தவாத - கொடுந்
தீயவச் சூரற்குப் பேருருக் காட்டிய
சேவகா நல்ல சேவகா

கன்னிச் சிவத்தமிழ்ச் சங்க மரூஉவிய
காவலா தமிழ்க் காவலா - இறை
களவிய லுக்குரை கண்டு கண் ணீர் விட்ட
கந்தனே சிவன் மைந்தனே

பென்னம் பெரியநக் கீரனாற் றுப்படை
பெற்றவா கேட்டுப் பெற்றவா - உன்னைப்
பேணிக் கலம்பகம் பாடினேன் காத்தருள்
போதகா நல்லைப் போதகா

52. வஞ்சப் புகழ்ச்சி
(கலிவிருத்தம்)

போற்றி யென்று புகழ்ந்து பரவினோம்
ஆற்ற லின்றி அடியேம் வருந்திட
ஏற்ற மிக்கவே லேந்தி யிருந்தனை
ஊற்ற மிக்க ஒருமயில் நல்லையா.

53. தலைவி கூறியது
(கலித்துறை)
(கார் காலம் வருவேனென்ற தலைவன் வராதது கண்டு
முகிலுக்குக் கூறியது.)

நல்லையிற் கோயில்கொள் நன்முருகேசனை நானொருத்தி
புல்லுதனோக்கிப் புனைந்தசொன் மாலையைப் போற்றி வைத்தேன்.
எல்லை யிக் காலத்தில் வான்வழிச் செல்கிற் எழில் முகிலே
சொல்லுதி முன்சொல்மறந்ததென் னோ வென்றேன் தோன்றலுக்கே.

54. கலி விருத்தம்முன்னிலைப் பரவுதல்

கேடுமாக்களுங் கெட்ட திருவினார்
நாடி யுன்னையிந் நல்லூர் பரவுவார்
தேடி யானுனைத் தேரப் புலன்தந்தாய்
வாடி நிற்குமென் வாட்டந் தணிவிப்பாய்

55. கீர்த்தனை

பல்லவி

வாட்டந்தணித்திடுவாய் - நல்லை யுனை
வந்து வணங்கு மடியேன் தினம்படும்
(வாட்டந்)

அநுபல்லவி

ஆட்ட மாடுந்தில்லை யம்பல வாணன் போல்
நாட்டங் கொண்டேயிந்த நல்லையிருந்தென்
(வாட்டந்)

சரணம் - 1

ஆறுதிருமுகம் ஆறிரண்டு புயம்
ஆறிரு திருவிழி ஆறிரு திரச்செவி
கூறுந் தனிச்சுடர் கொற்றவேல் கையேந்தி
கோலக் குறத்தியுங் குஞ்சரி யோடெய்தி
(வாட்டந்)

சரணம் - 2

நேரந் தவறாது மஞ்சன மாட்டினேன்
நித்திய பூசையும் மெய்த்தப் புரிந்துள்ளேன்
ஆரம் கலைமலர் மாலையும் சூட்டியே
அன்பின் அடியேன்யான் கெஞ்சி வழிபட்டேன்
(வாட்டந்)

சரணம் - 3

ஆடும் மரகத மாமயில் நீ ஏறி

அடியார்க் கருள்தரக் கொடியிற் சேவல் கூவும்

பாடிப்பாடிப்பல பாமாலை சூட்டியே

பத்தி செய்தேன் அருட் சித்திதந் தடியேன்றன்

(வாட்டந்)

சரணம் - 4

வல்ல கலம்பக மாலையிஃ துன் மார்பில்

வாடா திருந்திட வாழ்த்தியே கட்டினேன்

அல்லல் களைந்தெனை ஆட்கொள்வ துன்கடன்

ஐய, கடம்பா, குகா கார்த்தி கேயா என்

(வாட்டந்)

56. வஞ்சி விருத்தம்

(குறியிடங் கூறல்)

அருள் செய்திடு மறுமுகன் நல்லையிலே

பொருள் செய்திரு நெல்வய லெல்லையயல்

உருள் பைம்பொழில் செங்கனி மாமரமே

ஒருபைங்கிளி தேமொழி வாழிடமே

57. நிலவைப் பழித்தல்

(நேரிசைச் சிந்தியல் வெண்பா)

மெலிந்தே முகம்வாடி மேயினாள் வள்ளி

நலிந்தாள் மதிமே நண்ணல் - பொழிந்தவைவேல்

நல்லூருக் கப்பால் நட.

58. **தாயிரங்கல்**

**(வஞ்சி விருத்தம்)**

நண்ணு நல்லையில் நாதனே
கண்வ ளந்தில னென்மகள்
பண்ணின் தென்றல் பிறைவர
எண்ணி யென்செய்வ ளுணர்தியோ.

59. **குறத்தி குறி**

**(கலி விருத்தம்)**

யோகர் பணி நல்லையில்
வேலன் வருமென்றேன்
பாகம் வரும் வான்மயிலுங்
கான் மயிலு மென்றேன்
யாகமுறு வேதவழி
நான்கும் படியேறி
போகமுற லாம் முறத்தில்
போட்டநெலுச் சொலுமே.

60. **ஊர்**

**(அறுசீராசிரிய விருத்தம்)**

மேவி விண்மகள் மாலை சூட்டிட வேளென நின்றான்
காவி னின்றநல் வள்ளி மானையே காதலில் வென்றான்
நாவில் நாவலர் யோகர் சென்னியில் தாளிணை சூட்டி
ஓவில் நான்மறை யோசை ஓங்கிட உறைவன் நல்லூரே

61. **வலைச்சியர்**

**(கலித்துறை)**

ஊரன் னிவன்கண் ணுறுமென் றவன்கண் உளமே
மாரன் னவன்கண் மலர்க்கண் தொடுக்க வருகின்ற
தாரன் நல்லூர்க் கடம்பன் மேற்கண் வலை வீசி
வாரம் பொருந்த வலைச்சி பிடித்தாய் வசமாக

62. தழை (கட்டளைக் கலித்துறை)

வயமாக வேலடி வேலுடை வள்ளல் தழைத்தனையே
நயமாக வேகுற வள்ளி நயந்தில ளென்றிகுளை
பயமாக வேமறுக் கக்குகன் நன்மட லூர்வனென
உயலா, மெனத் தழை, யேற்றனை, உய்யநல், லாயுனக்கே.

63. முன்னிலைப் பரவல்
(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

கேளென வேசுரர்க் காயசு ரேசனைக்
கீண்டிடத் துண்டிய வேலவா
நாளதி லிந்திரன் நன்மக ளைமிக
நன்றியு டன் மணாங் கொண்டவா
நீளத்தி னைப்புன மேகியே வள்ளியை
நித்திய முத்தியிற் சேர்த்தவா
வாழநல் லூரின் கலம்பகம் பாடிட
வைத்த வாஉயர் வித்தகா.

64. தோள் வகுப்பு
(பதினாறு சீரடி யாசிரிய விருத்தம்)

வித்தக நற்கலை விளங்கும் புகழன
வெற்றிவே லாயுதந் தாங்கும் தகையன
விண்ணவர் வாழ்த்தவும் மண்ணவர் போற்றவும்
வெம்பகை போக்கிடும் வீரம் செறிந்தன
மத்தநல் யானை முகத்தனைக் கூவியே
மங்கைநல் வள்ளியை வாரி யணைத்தன
மாறான பூதனை நீறாக வாட்டியே
மன்றாடுங் கீரன் புனத்தை யுருக்கின

பத்தர்கள் பாடிட நற்கவி மாலைகள்
பாங்குட னேற்றவை யோங்கிப்பூ ரிப்பன
பண்புள நாவலன் சைவம் பரப்பிடப்
பக்கத்தில் நின்றவ ரச்சந் தவிர்த்தன

புத்தகம் புதுப்படை திக்கெட்டிலும் வர
பூண்டொ டவற்றைப் பொருதி யலைத்தன
பூநல் லூரினில் வாழும் முருக வேள்
பொன்னிற் பிறங்கிப் பொலியுமத் தோள்களே.

65. பிச்சியார் (ஏழடி வெண்டுறை)

கள்ளுலவும் பூமாலை தோளசைய
பொன் வட்டில் கையிலேந்தி
அள்ளிலை வேற் கந்தவேள் ஆடுதிரு
நல்லையின் கண் ணாடிப்பாடி
வள்ளிதெய்வ யானையினோர் பிச்சையிடப்
பார்த்திருப்பர் மானினல்லாய்
கொள்ளை கொண்டா யென்னையென
அப்பிச்சி கோபித்துக்
கள்வபோ வென்று ரைத்துக்
கந்தனல் லூரின்
புள்ளிமயி லோ னென்
புண்ணியவான் என்றன்
வள்ளலவன் வேலிருக் கென்
றன்னானை வைதாளே.

66. குறத்தி தலைவியைத் தேற்றியது
(பதினான்கு சீராசிரிய விருத்தம்)

தளரு நடையு மெலியு மிடையும்
தளங்கு தனமு முடையாய்
தமிழி னினிய மொழியி னொருவன்
தன்னைப் பிணிக்குந் தலைவி

இளமை ததும்பு மமரர் மகளை
முருக னணையு முன்னே
இனிய குறியை யிசைத்த குறவர்
இயைந்த குடியின் கொடிநான்

கிளருன் மனதிற் கவலை யகல
கிட்டுங் கண்கள் நிறைய
கிளைஞ ரென்ன மாலை கொண்டு
கிட்டு வானொரு காளை

வளம மைந்த வனப்பி னல்லை
வாழும் வேலன் அருளின்
வரத்தின் மொழிந்த குறிதப்பாதுன்
வாழ்வுங் கனவும் பலிக்கும்.

67. ஊசல்

(எண்சீராசிரிய விருத்தம்)

பலிக்குத் திரிந்துழலும் பரமன்புகழ் பாடி
பகருமொரு பெருமுருகைப்
பாடுமிள மடவீர்
கலிக்கும் வளைமயிலுங் கரங்கூப்பி நாளும்
கந்தனென மைந்த னெனக்
கடம்பனெனப் புகல்வீர்
ஒலிக்கும் கிண்கிணியாட உயர்வேலை யேந்தி
உலகுய்ய நல்லைநக
ருவந்தமரு முருகை
நலிக்குந் துயரகல ஆட்டீர் பொன்னூஞ்சல்
நன் முருகா வென்றேத்தி
ஆட்டீர் பொன்னூசல்

68. வண்டு விடுதூது

(எழுசீராசிரிய விருத்தம்)

ஊசலி லேற்றி யுலகவர் முன்னே
உவந்துயா னாட்டிய வொருவர்
தேசுடைக் கலைகள் மணியணி கொண்டு
திரும்புவான் சென்றனரன்று
நேசம்வைத் திலரா யித்தனை நாளும்
நின்றனர் நல்லையிற் சோலை
வாசஞ்செய் வண்டே மறந்ததே னென்று
வாழத்தி யுரைத்திடாய் வகுத்தே.

69. உருவெளிப்பாடு

தலைவன் பாங்கனுக்குக் கூறியது

(எண்சீராசிரிய விருத்தம்)

தேன்மொழி யமுதும் திகழ்முக மதியும்
திரியுங்கட் கயலையுங் கொண்டு
வான்மெலி யிடையா மின்னலி லொல்கி
வாணகை முத்தமுங்காட்டி
தான்நடைப் பிடியாய் குழற்புயல் சுமந்து
சாயலில் மயிலென நல்லை
நோன் பிருந் தயலென் நோக்கெலா நின்றாள்
நுவல்வதென் பாங்கவென் றழைத்தான்

70. ஊர்

(எண்சீராசிரிய விருத்தம்)

தலைநிகர் கோபுர மலையி நின்றிட
தண்ணிய யமுனையாந் தடமுஞ் சூழ்ந்திட

நிலையுறு கடிநகர் தோறு மாடமேல்
நின்றமங் கையரென மயில்க ளாடிட
கலைவளர் பள்ளிகள் மடங்கள் கோயில்கள்
கவினுறத் திருமுறை பண்க ளார்த்திட
அலைவிலா விளையுளோ டறிஞர் செல்வர்கள்
அகமெலா நிறைந்தரு ளாடு நல்லையூர்.

71. கோலாட்டம்(சிந்து)

நல்லை யுறையுமெம் நாதனெடி - அவன்
நற்றவத் தோர்பணி சீலனடி
தொல்லை வினைகளைத் தீர்ப்பவனடி - அதைச்
சொல்லிக்கைக் கோலடித் தாடுங்கடி (1)

தேவர் சிறைதவிர்த் தாண்டவண்டி - திறல்
தெய்வ ரசுரரைக் காய்ந்த வண்டி
ஏவர்க ளுந்தொழு மீநனெடி - அவன்
ஏற்றம்பு கழ்ந்துகோ லாடுங்கடி (2)

எந்தத் தலத்திலி ருந்திடினு - உயர்
இந்தநல் லூரில்லி ருப்பவண்டி
சந்தக் கவிமாலை கேட்டுப்பாடி - சிவ
சண்முகா வென்றடித் தாடுங்கடி (3)

ஆற்றுப் படைபுகழ் கேட்பவன்டி - நல்லை
ஆறுமுக னெங்கள் ஐயனடி
போற்று மவன்புகழ் பாடிப்பாடி - ஒரு
பொற்கோ லெடுத்தாட்டம் போடுங்கடி (4)

72. மயில் விடு தூது

(வஞ்சி விருத்தம் – சிந்தடி நான்கு)

கடிமாதில் நல்லைப்பதிக் கார்மயிலே
முடிசேர்ந்துயர் மணிக்கோயிலின் முருகனிடம்
அடியேனுனை மறவேனென அன்றுரைத்த
படியேயிருந் தயர்ந்தேனெனப் பரிந்துரையாய்.

73. தோழியைத் தூதனுப்பியது

(எண்சீராசிரிய விருத்தம்)

உரைக்கும் முகமதியீ ரொண்குவளைக் கண்ணீர்
உருக்குஞ் சிறுமுத்த மூரற்செவ் வாயீர்
திரைக்கும் யமுனாரி தீரந்திகழ் நல்லூர்
செம்பொற் றிருக் கோயிற் சேயோற் கண்டன்றென்
கரைக்குந் திருநாமங் கேட்டே கசிந்துருகி
காதலுடன் வந்துசெய்த மாயச்செய லெல்லாம்
இரைக்கும் மலர் வண்டைக் காட்டிநினை வூட்டி
இன்னல் துடைத் தருளும்படி முன்னம் பரிந் துரையீர்

74. பாடல் காணப்படவில்லை

75. புறநிலை வாழ்த்து

(பஃறொடை வெண்பா)

வாழ்வாங்கு வாழவே வானவரு நல்லூரைச்
சூழ்வாங்கு சூழ்ந்து தொழுகின்றார் - தாழ்வாங்கு
வாராமல் நீரும் வருந்தி யுழைத்த பொருள்
நேராய்த் தருமம் நிலைத்திடவே - பேராத
செம்மை வழியறிந்து சேவை பல புரிந்து
இம்மை மனமக்க ளோடுறைந்து - எம்மான்
கோலப் பதமடைவீர் கூடி.

76. மதங்கியார்

(கலி விருத்தம்)

கூடி நல்லைக் குமரனை நோக்கியே
ஆடிக் கண்ணா லழைக்கு மதங்கியே
சோடி வாளைச் சுழற்றின் பொறுக்காமல்
வாடி மெல்லிடை வாளா துவளுமே.

77. விழி நிலை

(வஞ்சி விருத்தம்)

வளமுற வடியரை வாழ்விக்கும்
இளநகை யிருவரோ டின்பினுறும்
உளமகிழ் முனிவருக் கொளிசெயும்
வளமலி நல்லையன் வரிவிழிகளே

78. திருவுலா

(பஃறொடை வெண்பா)

களிக்கும் வரிவண்டு காவினிற் பாடி
குளிக்கும் உயர்நல்லூர்க் கோயில் - விளிக்கும்
மயிலேறி மாமுருகன் மங்கையர்கள் சூழ
அயிலோ டகிலம் புரப்பான் - எளில்வீதி
கோழிக் கொடியசையக் கொற்றத் திசையெங்கும்
ஆழி பிறங்க அடியார்கள் - வாழி
என விசைப்ப வேழிசையும் எங்கும் பரவ
மனவா சகங் கடந்த பேதை - இனமான்
பிணையாய்க் கரதலங்கள் பேசவுடன் நோக்கத்
துணையாய்ப் பெதும்பை துதிக்கை - மணமங்கை
அளிக்கும் முகநோக்கி லாழ - சுகத்தில்

விழிக்க வொருமடந்தை வீழ - களித்தரிவை
புன்முறுவல் பூக்கப் புரண்டாள் புதுமதியோ
நன்னுதலாள் நற்றெரிவை நாடி - மென்புயத்தை
எண்ணி யுலாவ இனியளாம் பேரினம்பெண்.
நண்ணி யவன்பே றடையவே - கண்ணியமாய்
நற்றவரும் வாழ்த்தினர் நன்று.

79. சம்பிரதம்

(பதினான்னு சீராசிரிய விருத்தம்)

நாடியுயர் நல்லைதனில் நற்கடம்பன் முன்னிலையில்
நம்மையெதிர் வெல்பவர் யாரோ
நவில்கின்ற வாடையுடன் கோடையுமே மென்செய்யும்
நகைத்திடப் போகு முடனே

பாடியும் வாடியும் பலஅம்பு வில்லுடைய
பரமனருள் முருகன் துணையால்
பஞ்சப் புலன்களௌமை கெஞ்சிப் பணிந்திட
பாங்கான ஒளியை நல்குவோம்

வாடிவெட் டுப்பட்ட தலையையும் வளர்விப்போம்
வல்லவரை ஏவல் கொள்வோம்
வளமான ஆறுபடை வீட்டைப்போல் நல்லையில்
வள்ளலைக் காண வைப்போம்.

கோடிகோ டிப்பிர காசகும ரேசனெம்
குழைவினால் குதித்து வருவான்
குறையாத பத்தியுடன் கும்பிட்டா லுங்கட்கும்
குரைகழல் அருளிக் காப்பான்.

80. காமமிக்க கழியடர் கிளவி

(கலி விருத்தம்)

காக்கு நன்முரு கென்கன வில்வர
பார்க்குந் தண்மதி பாலிக்கு மென்துயில்
தாப்புக் கயிறில் தயங்கித் தரிக்கிலா
முப்பினா னல்லை முற்றும் நலிவனோ?

81. பழிச்சினர் பணிதல்

(பதினான்கு சீர்(திருப்புகழ்) கழிநெடிலாசிரிய விருத்தம்)

நலிந்திடு மடியவர் நினைந்திட மயின்மிசை
நடம்பயில் கழலொடு வருவோனே
நடுங்கிட நின்றிடு மசுரர்தங் கிளைபட
நயந்திடு மயில்விடு மறவோனே

கலங்கிட அரிவையர் இரிதரக் கெடுதிசெய்
கயவர்தங் கனவினு மணுகாத
கடிவெள்ளை வாரணம் பிடியென வளர்த்திடும்
கன்னியை வேட்டருள் கதிர்வேலா

இலங்கிடு புனமதில் கிளிமுதற் புள்ளினம்
எறிந்திடுங் குறக்கொடி யுறவாக
எளிதினி லைங்கரக் கடவுள்வந் துதவிட
இருகரம் பற்றிய விளையோனே

மலர்ந்திடு கடம்பணி மார்பனே நல்லையில்
மாநகர்க் கோயிலி லுறைவோனே
மகிழ்ந்துநாம் பாடிட கலம்பக மாலையை
மகிழ்வுட னேற்றருள் பெருமாளே.

82. ஊர்

(அடிமறிமண்டில வெளிவிருத்தம்)

பெரிதாந் தமிழ்மன்னர் பேரரசோச்சிய - பிறங்கு நல்லூர்
அரிதாம் மறையொலி பண்ணொலி யார்க்கும் - அரியநல்லூர்
உரிதாம் மயில்பயில் கோபுரக்கோயில் - உயர்ந்த நல்லூர்
எரிதாழ் பலகுண்டம் பல்லவி தேவர்க்காய் - ஏற்ற நல்லூர்

83. கிள்ளை விடுதூது

(கலி விருத்தம்)

நல்லை நாதன் நவில்மென் சிறைக்கிள்ளாய்
சொல்லும் பால்கனி தேனுந் தருகுவேன்
மெல்ல வென்னை மறந்தில னென்றசொல்
அல்லல் தீர அவர்க்குரைத் தேயழை

84. நெஞ்சழிதல்

(வஞ்சித்தாழிசை)

அழைத்தீயுங் கனிமரத்தின்
உழைப்படரு மிருகொடியின்
விழைத்தமரு நல்லையனை
இழைத்துருகு மனனே காண் (1)

கடம்பமரும் பெடைகாண
நடம்பயிலு மயில்மேவி
இடம் பிடித்த நல்வேளிர்
வடம் பிடித்து காண்மனனே (2)

கலைவளரு மிணையிலியாய்
நிலை வளரு நல்லூரே
உலகமதிற் சரவணமாய்
நிலவிடுமென மனனே காண் (3)

85. தவம் திருப்புகழ்)

(எழுசீராசிரிய விருத்தம்)

காண்பரிய கோபுரமும் கற்பகத் தருநிழலும்
கவினியதா நல்லையூரில்
மாண்பின் தவமாதவர்கள் மனவொடுக் கத்தினொடு
மழைவெயிற் பனியில் மூழ்கி
ஊண்முத லுறக்கமோ வின்றியிரு புருவநடு
உள்ளொளியில் மூழ்கியுன்னை
தாண்டவ மாமயில் மீது களிதேரில்வரச்
சண்முகா சரணமென்பார்.

86. தலைவியின் இயலுமிடமுங் கூறல்

(கட்டளைக் கலித்துறை)

மென்பார்வை யாற்பிணை
மெல்லிய லால் மஞ்ஞை மின்னிடையாள்
தன்பால் மொழிகிளி
தண்முக மேமதி தாழ்குழலாள்
அன்பா லடியார்க்
கருள்பொழி நல்லை யகலிடமே
என்பா யுருகி
யிருந்தன ளுன்னடி யீடுபட்டே

87. இடைச்சியர்

(ஆசிரியதாழிசை)

பட்டுக் கட்டி பால்மோர் விற்று
செட்டில் வாழு மாயர் மகளே
எட்டி யுன்கண் நல்லூர் பார்ப்பதேன்
காலை தோறும் கறக்கும் பாலை
வேலையாக விற்கு முன்னை
சோலை மாலை தொடர்வார் யார் சொலாய்

ஆயர் பாடி வதியும் பெண்ணே
நேய நெஞ்சில் நல்லூ ராரைத்
தோய வாட்டித் துயரந் துடைப்பாய்.

88. மடக்கு
(எண்சீராசிரிய விருத்தம்)

பாரும் வானும் படர்வது நல்லையே
பற்றின் மிக்கோர் படர்வது நல்லையே
ஆரு நற்கடம் புமணி மாலையோ
டாறு மாமுக னுலாவுநன் மாலையே
தேரு நற்றமிழ்ப் பாவலர் நூலெலாம்
திகழு மையன் திருப்புய நூலெலாம்
ஏரின் நல்லை யிருக் கொ டோடுமே
எந்தை யென்னு ளிருக்க நின்றாடுமே

89. நெஞ்சொடு கிளத்தல்
(கலிவிருத்தம்)

ஆடும் மஞ்ஞை யமருங் குமரவேள்
பாடு மென்னைப் பரிந்துநல் லூரிலே
தேடிடி நற்பதத் தேனையு நல்குமோ
கூடு மன்பினிற் கொண்டுவந் துய்க்குமோ.

90. தோழி - மடல் விலக்கியிசைவித்தல்
(அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

மோனத் தலை யுருவெழுதி
முன்னே மடன்மா ஊர்வனெனும்
ஞானத் தலைவ னை மறுத்து
நல்லா யன்னாள் உருவில் நடை

மானச் சாயல் மொழி யெழுத
வருமோ வென்று மடல்விலக்கி
வானத் தவரின் காந்தருவ
மணத்துக் கிருளை வழிசெய்தாள்.

**91 தோழி வெறியாடும் வேலனை யிகழ்ந்து அறத்தொடு நிற்றல்**
**(வெண்டாழிசை)**

தானாடுந் தெய்வத் தலைவனை நன்கறிந்தும்
மானாடு நோய்க்கு மருந்தே முருகென்று
ஏனாடாய் நல்லா யியம்பு (1)

வெறியாடும் வேலோனை வேண்டி மயினோய்க்கு
குறியா யுரைத்தாய் குகனே மருந்தென்று
அறியாயோ நல்லூரகம். (2)

நெல்லுக் குறியாலும் புல்லுக் குறியாலும்
வல்லி யணைய வருங்குகனை நல்லூரில்
புல்லிதாய் தாள்பணிந்து போற்று. (3)

**92. ஊரிலுறுபயன்**
**(வாழ்த்தியல் வஞ்சிப்பா)**

போற்றும் மழை புவியார் தர
சாற்றும் மயில் தானாடியிடும்
ஏற்றும் கொடி மலரா ரளி

நாற்ற மது நனியார்ந்திடும்
முகமாம் புய மதி கூம்பிட
அகமாம் பலு மதி நோக்கிடும்
மடவார் நய னம் பொருதிட
மடையார் கயல் நிரை மோதிடும்
கடியார் பகல் இரவே தொறும்
கொடியா ரினம் கருவேற
அடியாரினம் படியேறிட
பொடியாரவர்க் கருள் சேர்த்திடும் அதனால்,
செந்தமிழ் நல்லைநின் றாடும்
எந்தைமுருக னிணையடி யேத்துவாம்.

93. நிலவைப் பழித்தல்

(அறு சீராசிரிய விருத்தம்)

தூமேவிய திங்க ளுதித்தனையே
தொடர்தாமரை என்னிலைத் தாகியதே
நாமேவிய கங்குலின் வாய்நடுவாய்
நமரைத் தணலாகுவ தெவனோ
பாமேவிய பாவலர் பார்த்துனையே
பகைஞனெனப் பகருவர் பார்மதியே
தேமேவிய காவுறு நல்லையுளான்
திகழ் - சேவடி தங்கிடி னென்னசெய்வாய்

94. காலம்

(ஆசிரியத் துறை)

செவ்வானம் பாற்கடலிற் சேருமாலைக் காலம்
சேயுநல்லூர்ச் சட்டிதனிற் சாறயருங் காலம்
அவ்வானத் தரம்பையரு மகப்பையுடன் வந்தே
அறுமுகற்கு அமுதளித்து அகங்கு ழையும் காலம்
தெய்வானு கூலவமு தளிக்க வகங் குழைந்தே
உய்வான பிள்ளைச் செல்வ வேண்டி நோற்கும் நலத்தால்
ஓவாது மக்கள் நல்லூர் உறுவரக் காலத்தே.

95. மறவர் மணம் நேர்தல்

(எழுசீராசிரிய விருத்தம்)

தெய்வம் பரவிடும் தையலை வேட்பவன்
தேவர் வரிசையி லுள்ளவனோ
வையந் தனிச்சுரர் வாழ்த்துநல் லூரினில்
வந்து வழிபட வல்லவனோ
உய்யும் படிக்கொரு செந்தமிழ் பாடி
உயர்தமிழ்ச் சங்க மிருந்தவனோ
ஐய மிலையெனில் மன்னவர் மன் னற்செம்
மகள்தனை யன்புட னருள் வோமே.

96. நெஞ்சொடு கிளத்தல்

(அடிமறி மண்டில ஆசிரியப்பா)

ஓமென் பிரவத் துள்பொருள் தானே
தாமமாய்க் கடம்பு தரிப்பவன் தானே
சேமநல் லூரிற் சேர்த்தருள் பவனே
ஏமநல் லுரையும் இருந்திடத் தருமே.

## 97. மணவணி வேண்டல்

(இன்னிசை வெண்பா)

மேவுநல் லூரனே மெல்லினல் லாளொருத்தி
பாவும் இனமும் பலபாடி - போற்றியே
ஆயுநல் தெய்வமா மன்பால் மணவணிகள்
தேடினாள் வாராய் சிறந்து.

## 98. முன்னிலைப் பரவல்

(நேரிசையாசிரியப்பா)

சிந்தனைக்குரிய சிதம்பரம் போல
வந்தனைக் குரித்தாய் வாழ்வுசேர் நல்லையில்
ஆறுமா முகமும் பன்னிரு கரமுமாய்
வீறு வேல் தாங்கி வினை கடிந்து
பாடுவா ராடுவார் காட்சியில்
ஏறுமா மயிலில் ஏறிவிளை யாடும்
மாறிலா வானவர் வணங்கும்
ஈடிலாத் தெய்வமே
ஆரணம் புகழும் நாரணன் மருகா
வாரணக் கொடியோய்
மான்மகள் வான்மக ளடனே
அந்தணர் போற்றுஞ் செந்தமிழ்த் தலைவா
மூலநின் றாடு ஞானவே லவனே
மோன ஞானிகள் இருந்து
காணத் துடிக்குங் கார்த்தி கேயனே
சரியையா ருணர கிரியையார் காண
யோகர்க் குறவாய் ஞானமாய் நிற்போய்
எத்திற மடியவர் துதிப்பினும்

அத்திறந் தோன்றும் ஐயனே
பாலநா யகனே பார்ப்பதி சுதனே
மணியுஞ் சங்கும் மங்கலத் தார்ப்ப
அணிவிழாப் பூசையில் ஆனந்தங் கொள்வோய்
மாப்பாணர் மரபைக் காப்பாள ராக்கினை
நாவலர் செல்லப்பா யோகரால்
சைவம் வளர்த்தனை
அதனால் நூறின்மேல் பள்ளி யமைத்த
செந்தமிழ் பரப்புஞ் சீரிய பணிசெய்து
வந்தனைக் கரியராய் வாழ்ந்த
சுப்பிர மணியத்தின் தோன்றலாம்
இராசரத் தினத்தை இசைவித்தோய்
ஆதீனத் தரும்பணி யேற்றுக்
கம்ப கோட்டமுங் கலந்தனை
பாட்டியற் புலவோர் ஏட்டினூலு வந்தனை
அடியேன் கண்ட அற்புத மதனால்
பாடிய இணைமணி மாலையை
கூடிய ஆதீனக் குரவர்முன் ஏற்றனை அதான்று
விந்தையா மென்பத்து நான்கக வையிலும்
இந்த அரும்பொருட் கலம்பக மாலையை
கந்தா வுனக்குக் காணிக்கை யாக்கினேன்
ஆளா மடியவர்க் கன்பனே
கேளாய் நங்கிளை கிளைக்கவும்
கோளாய நீக்கவும்
வாயார வாழ்தி வணங்கினேன்
பேரானந்தப் பெருவாழ்வு தந்தருள்
ஆரா அன்புடன் அடியேன் வாழவே.

99. செவியறிவுறூ (அறுசீராசிரிய விருத்தம்)

வேலவர் தம்விர தங்கள் பிடித்தே
 விரும்பு வரம் பெறவும்
சாலவுங் கல்வி படித்துநல் வாழ்வில்
 சார்ந்து உயர்ந்திடவும்
வாலறி வுற்று இம்மையு மறுமையு
 வைகிநன் முத்திபெற
மூலம தாகிய நல்லையெ முந்தருள்
 முருகன் முன்னிற்பான்.

100. ஓம்படை
(எண்சீ ராசிரிய விருத்தம்


நினைவார்க் கொரு - குறியாய் - மண
 நிறை - வாகிய வொளியாய்
நின்றே - நல வடியார் - தொழ
 நிறைவா - யுறு பயனால்

நனை - வாருறு பெரு - வாழ்வினை
 நல் - குங் கும ரேசன்
நாளும் - மருள் நல்லைப் பதி
 நாமக்கலம் பகநூல்

எனையாள்தரு மன்னைசிவ
 காமியுறை யிணுவில்
இருந்தவுயர் பேராயிர
 முடையான்வழி வுதித்த

புனைமாக்கவி அளவைவசி
 சிற்றம்பலம் படைத்தேன்
பொன்னூலென நன்னூலென
 புகழ்ந் தேத்திட ஈழம்

சுபம்




"கலாபூஷணம்", "புலவர்மணி", "ஞானஏந்தல்"
அமரர் வை.க.சிற்றம்பலம் அவர்கள்
1914-2015 காலப்பகுதியில் வாழ்ந்த ஓர்
முதுபெரும் புலவர். பல்வேறு பிரபந்தங்களைப் பாடியுள்ள
இவர் இணுவில் ஊரைப் பிறப்பிடமாகவும்
அளவெட்டி ஊரை வாழ்விடமாகவும் கொண்டவர்
நான்மணிமாலை, மும்மணிமாலை, திருவிரட்டை மணிமாலை
ஒருபா ஒருபஃது, திருவூஞ்சல்கள், இணைமணிமாலை,
போற்றிப்பத்து, அந்தாதி, இடர்களைபதிகம், திருவருக்கமாலை
திருப்பள்ளிஎழுச்சி, பிள்ளைத்தமிழ், ஆற்றுப்படை எனப் பல
வகையான பிரபந்தங்களையும் இவர் பாடியுள்ளார்.

பதிப்பாசிரியர்

சாய்ராம் பிறிண்டேர்ஸ், சங்கானை. 0776915339